மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அந்தத் திட்டம் தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனை முடிந்தவுடன் அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்படும். அப்பொழுது நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. தே. கேசவலு : தலைவரவர்களே, சங்கராபுரம் பகுதிக்கு வரும் வாய்க்காலை கல்லக்குறிச்சிக்கும் விரிவுபடுத்தும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நான் ஏற்கனவே பதில் சொன்னேன், கல்லக்குறிச்சி வட்டத்திலும் உள்ள நிலங்களுக்குப் பாசன வசதியளிக்க ஒரு திட்டம் உள்ளது.

வைகையிலிருந்து தண்ணீர்

*** 420 வினா—திரு. எஸ். காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை கோட்டம், முதுகுளத்தூர் வட்டம், கிருதமால் நதி வழியாக வைகை நதியிலிருந்து தண்ணீர் விடும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் என்றால், அத்திட்டம் எப்பொழுது செயல்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

குடதலையாற்றின் குறுக்கே மேம்பாலம்

*** 421 வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் வட்டம், குடதலையாற்றின் குறுக்கே பாகல்மேடு—தாமரைப்பாக்கம் இணைப்புச்சாலை ஆகியவற்றினை இணைக்க ஒரு மேம்பாலம் கட்ட செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.